பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
31 08 2025 **SUNDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு சீனாவின் Tianjin நகரில் இன்று தொடங்குகிறது.

2. நாட்டின் முக்கிய இடங்களில் வான் பாதுகாப்பு அமைப்பு முறை நிறுவப்படும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்

3. நாடுகளுக்கு இடையேயான மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதை இந்தியா ஆதரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் **கூறியு**ள்ளார்

4. ராஜஸ்தான், இமாச்சல பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களின் ஒருசில இடங்களில் இன்று கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

5. அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யூகி பாம்ரி – நியூஸிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**>>>>><<<<<**

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு, சீனாவின் Tianjin நகரில் இன்று தொடங்குகிறது.

இந்த உச்சிமாநாட்டில், 20க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்களும் 10 சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கின்றனர்.

சீன அதிபர் திரு. ஷீ ஜின்பிங் தலைமையில் நடைபெறும் இந்த உச்சிமாநாட்டில், நீடித்த வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி சீனா சென்றடைந்தார். அவருக்கு, இந்திய வம்சாவளியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

(சவுண்ட் பைட் – முழக்கம் 15 செகண்ட்ஸ்)

இந்த மாநாட்டுக்கு இடையே, ஷாங்காய் உறுப்பு நாடுகளின் தலைவர்களை சந்தித்து, பாதுகாப்பு, நீடித்த வளர்ச்சி, தகவல் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து பிரதமர் பேச்சு நடத்துகிறார்.

**>>>>><<<<<**

நாட்டில் உள்ள அனைத்து முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அடுத்த பத்தாண்டுகளில் சுதர்சன சக்கரம் எனப்படும் வான் பாதுகாப்பு அமைப்பு நிறுவப்படும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

நொய்டாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தனியார் விமான எஞ்சின் பரிசோதனை நிறுவனத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பாதுகாப்பு தளவாடங்களுக்கு வெளிநாடுகளை சார்ந்திருக்கும் நிலையை குறைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்புகள், எத்தகைய அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும் வகையில், வலிமையானதாக இருப்பது உறுதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சக்திவாய்ந்த விமான எஞ்சின்களை வடிவமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்பு, எதிர்கால பாதுகாப்பு நடைமுறைகளுக்கு வலுசேர்க்கும் வகையில் அமையும் என்று திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இரண்டு நாள் பயணமாக அஹமதாபாத் சென்றடைந்தார்.

அம்மாநிலத்தில் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் வகையில், நகர்ப்புற சுகாதார சேவை மையங்களை இன்று அவர் திறந்து வைக்கிறார்.

பின்னர், Lal Darwaza-வில் உள்ள Bhadrakali கோவிலுக்கு சென்று திரு. அமித் ஷா வழிபடுகிறார்.

**>>>>><<<<<**

நாடுகளுக்கு இடையேயான மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் தீர்வு காண்பதை இந்தியா தொடர்ந்து ஆதரித்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பின்லாந்து வெளியுறவு அமைச்சர் Elina Valtonen-னுடன் நடத்திய பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

யுக்ரைன் – ரஷ்யா மோதலுக்கு, இந்தியாவை மையமாக வைத்து நடைபெறும் விவாதங்கள், உண்மைக்கு புறம்பானது என்று திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நாட்டில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அத்துறைக்கான இணையமைச்சர் திருமதி. ரக்ஷா கட்சே தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு விளையாட்டுத்துறை முக்கியப் பங்கு வகிக்கும் என்று கூறினார்.

விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள், உள்ளிட்ட நடவடிக்கைகள், மக்கள் இயக்கமாக செயல்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், உள்ளூர் சமூக அமைப்புகள், திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திருமதி. ரக்ஷா கட்சே கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

உலகளவில் இந்தியா, விரைவில் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று ரிசர்வ் வங்கி கவர்னர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், நடப்பு நிதியாண்டின் முதலாவது காலாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று கூறினார்.

இது, முந்தைய ஐந்து காலாண்டுகளை காட்டிலும் கூடுதலாகும் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஜன்தன் திட்டம் முக்கியப் பங்காற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அனைத்துப் பிரிவு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் தொடங்கப்பட்டள்ள இத்திட்டத்தின் கீழ், இதுவரை 55 கோடி வங்கிக்கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

>>>>><<<<<

*பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.*

*இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

**>>>>><<<<<**

*மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் தொழில்துறையில் உள்ள புதிய வாய்ப்புகளை முதலீட்டாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளிடையே முதலீடு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக கூறினார்.*

*இதனிடையே, அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள ஐக்கிய அரபு எமிரேட்ஸின் வெளிநாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் டாக்டர் Thani Bin Ahmed Al Zeyoudi, மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. ஷிராக் பாஸ்வானை சந்தித்துப் பேசினார்.*

*வேளாண் விளைபொருட்களின் சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான முன்முயற்சிகள் குறித்தும் இந்த பேச்சுவார்த்தையில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

**>>>>><<<<<**

*நாடாளுமன்றத்தில் ஆக்கபூர்வமான விவாதங்களில் பங்கேற்பதை உறுப்பினர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ வலியுறுத்தியுள்ளார்.*

*பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் உறுப்பினர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.*

அரசியல் ஆதாயத்திற்காக இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் உறுப்பினர்கள், அரசியலமைப்புச் சட்டத்திற்கு பதில் சொல்ல வேண்டிய சூழல் ஏற்படும் என்று கூறினார்.

மசோதாக்கள் விவாதங்கள் இன்றி நிறைவேற்றப்படுவது, எதிர்க்கட்சிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும் என்று திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

**>>>>><<<<<**

ராஜஸ்தான், இமாச்சல பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களில் ஒருசில இடங்களில் இன்று கனமழை முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு தொடர்ந்து மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது என்று வானிலை மையம் கூறியுள்ளது.

**>>>>><<<<<**

தலைநகர் தில்லியைச் சுற்றியுள்ள பகுதிகளில், காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த இரண்டு நாள் பயிலரங்கில், சாலை வடிவமைப்பு, மாசுக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

தில்லி, குருகிராம், ஃபரிதாபாத். சோனிபட், நொய்டா, கிரேட்டர் நொய்டா, காஸியாபாத், பிவாடி, நீம்ரானா ஆகிய 9 இடங்களில், இதுபோன்ற பயிலரங்குகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயிலரங்கில் அரசு அதிகாரிகள், துறைசார்ந்த பொறியியல் வல்லுநர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பங்கேற்கவுள்ளனர்.

காற்றுத் தர மேலாண்மை ஆணையத்தின் இந்த இரண்டுநாள் பயிலரங்கு காசியாபாத்தில் நேற்று நிறைவடைந்தது.

**>>>>><<<<<**

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யூகி பாம்ரி – நியூஸிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு, முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-0, 6-3 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Marcos Giron – Learner Tien இணையை வென்றது.*

**>>>>><<<<<**

*உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை வெண்கலப் பதக்கம் வென்றது.*

*பாரிசில் நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **19-21, 21-18, 12-21** என்ற செட் கணக்கில் சீனாவின்* Chen Bo Yang - Liu Yi *இணையிடம் தோல்வியடைந்தது.*

**>>>>><<<<<**

*ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது.*

*பீகாரின் ராஜ்கீரில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.*

**>>>>><<<<<**

*புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் உத்தரபிரதேச அணி - தெலுகு அணியை வென்றது.*

*மும்பை - குஜராத் அணிகளுக்கிடையேயான மற்றொரு ஆட்டம் டிரா ஆனது.*

*இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தமிழ்நாடு அணி - மும்பை அணியையும், பெங்கால் அணி - ஹரியானா அணியையும் எதிகொள்கின்றன.*

**>>>>><<<<<**

*அகமதாபாத்தில் நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 6 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களும் பதக்கப்பட்டியலில் முதலிடம் பெற்றது.*

**>>>>>end<<<<<**